10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 38 செவ்வாய்க்கிழமை ஜூன் 13 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## யாழ்தேவியோடு 'செல்பி': குடும்பஸ்தர் பலி

"செல்பி" எடுத்துக் கொண்டிருந்த இளம் தம்பதிகளை யாழ்தேவி ரயில் பந்தாடியதில், கணவன் சம்பவ இடத்திலேயே பலியானார். மனைவி படுகாயமடைந்தார்.

இந்தப் பரிதாபச் சம்பவம் அம்பாலங்கொடவில் நேற்றுமாலை இடம்பெற்றது.

இருமாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்து கொண்ட இந்தத் தம்பதியினர் தேனிலவைக் கொண்டாட அம்பலாங் கொடவுக்கு வந்துள்ளனர். 06

## வற்றாப்பளையால் வந்த வயோதிபர் சிதறிப் பலி!



தப்பி ஓடியது டிப்பர்


வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் பொங்கலுக்குச் சென்று திரும்பிய வயோதிபரை டிப்பர் வாகனம் ஒன்று மோதித் தள்ளியதில் அவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்.

யாழ்.சாவகச்சேரி கனகம்புளியடி சந்தி - புத்தூர் மீசாலை வீதியில் காளிகோவிலுக்கு அருகாமையில் இன்று அதிகாலை 5 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.இதில் சரசாலை வடக்கைச் சேர்ந்த விநாசித்தம்பி சிவசுந்தரம் (வயது-65) 06

## த.வி.கூட்டணியின் தலைவர் மரணம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், கரவெட்டி பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளரும் பொறியியலாளருமான இளையதம்பி சாந்தசொருபன் இன்று கொழும்பில் காலமானார். உடல்நலக் குறைவு காரணமாக நேற்று கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் இன்று காலை இயற்கை எய்தியதாக தெரியவருகின்றது. அவரது இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தகவல் வெளியிட்டுள்ளனர். (எ)

# நடேஸ்வராக் கல்லூரியில் குளவிகள் அட்டகாசம்



பொலிஸ் உட்பட 14 பேர் பாதிப்பு

காங்கேசன்துறை, நடேஸ்வராக்கல்லூரியில், நேற்றுக் காலை குளவிக்கொட்டுக்கு இலக்காகிய பொலிஸ் அதிகாரி உட்பட 14 மாணவர்கள் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலை வளாக மரமொன்றில் குளவிக்கூடு ஒன்று இருந்ததுள்ளது. நேற்று பலத்த காற்று வீசியதால், கூடு அசைந்து, அதிலிருந்த குளவிகள் மாணவர்களை நோக்கி படையெடுத்து அவர்களை பதம் பார்த்துள்ளன. குளவிகள் கொட்டியதல் மாணவர்கள் பெரும் சத்தமாக அலறினர். இந்தச் சத்தம் கேட்டு அருகே நின்ற பொலிஸார் அங்கு விரைந்தனர். எனினும் அவர்களையும் குளவிகள் விட்டுவைக்கவில்லை. எல்லோரையும் கலைத்துக் கலைத்துக் கொட்டித் தீர்த்தன.

இதனால் 13 பேர் பாதிப்படைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (அ)

## த.தே.கூ., ஜே.வி.பியுடன் பேச்சுக்கு தயாராகிறது சு.க

புதிய அரசியல மைப்பு விடயத்தில் ஏனைய கட்சிகளை சந்தித்து கலந்துரை யாடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முயற்சி களை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளது. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி ஆகிய கட்சிகளை தனித் தனியாக சந்தித்து கலந் துரையாடுவதற்கு அக்கட்சி 06

## அமைச்சர்கள் மீது விசாரணை மீளாய்வு செய்யக் கோரிக்கை



வடக்கு மாகாணத்தின் அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை மீளாய்வுக்குட்படுத்து மாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் கிளிநொச்சி மாவட்டப் பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கோரிக்கைக் கடிதத்தில்,

"குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பலவிடயங்கள் நிர்வாகத் துறையின் நடைமுறை களோடு தொடர்புபட் டவை என்பதை புலப்படுத்துகின்றன. 06

## மகிந்தவை தோற்கடித்த கோத்தா



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியைத் தழுவுவதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவே காரணம் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சமூக நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் நடவடிக்கைகளினால் கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் 06

## மாகாண சபை சர்ச்சை: சம்பந்தன் தலையிடுக!

"மாகாண சபையில் அமைச்சர்களுக்கு எதிரான விசாரணை அறிக்கை விடயத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலையிட வேண்டும்" என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக் கிளை கோரிக்கை விடுத்துள்ளது.

"வடமாகாண சபையின் ஆயுட்காலம் இன்னும் 15 மாதங்களே உள்ள நிலையில் அதனைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளை கூட்டமைப்பின் தலைவராகிய நீங்கள் அனுமதிக்கக்கூடாது. மாகாணசபையின் விடயங்களில் தலையிடுவதில்லை என்ற நிலையை மறுபரிசீலனை செய்து, விரைவில் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தை கூட்டி இது தொடர்பில் தீர்க்கமான முடிவைக் காண நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தாயக உறவுகளுக்கு ஆதரவாக புலம்பெயர் தமிழர் போராட்டம்



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தாயகத்தில் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு வலுசேர்க்க பிரிட்டனில் நேற்று பெரும் திரளாக ஒன்றுதிரண்ட புலம்பெயர் தமிழர்கள் உணர்வுபூர்வமாக அறவழி கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.இந்தப் போராட்டத்தை நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடு செய்திருந்தது.

பிரிட்டன், கனடா, பிரான்ஸ், 06



# ஹக்கீமே பதவி விலகு!

## கர்ச்சிக்கிறது பொதுபலசேனா

"இனமுறுகலை ஏற்படுத்தும் நோக்கில் போலிக்கருத்துகளை வெளியிட்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம் மக்களிடம் மன்னிப்புக்கேட்டு விட்டு உடன் அமைச்சுப் பதவியைத் துறக்க வேண்டும்" என்று பொதுபலசேனா அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான டிலாந்த வித்தானகே வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வெளிநாடுகளில் நிதியுதவிகளைப் பெறுவதற்காகவே முஸ்லிம்கள் தமது நிலையங்களுக்குத் தாமே தீமூட்டிக்கொள்கின்றனர். அதனைப் பொதுபலசேனா செய்ததாக குற்றமும் சாட்டுகின்றனர். கட்டாரிலுள்ள அடிப்படைவாதக் குழுவொன்றுடன் ஹக்கீமின் உறவினருக்குத் தொடர்பிருக்கின்றது. எனவே, அமைச்சர் ஹக்கீமுக்கு கட்டாருடன் உள்ள தொடர்பு என்ன?" என்று கேள்வியெழுப்பினார்.(இ)

## "ஆளுக்கொரு மரம் நடுவோம்"





உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கரம்பை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் "ஆளுக்கொரு மரம் நடுவோம். ஆயுட்காலத்தை அதிகரிப்போம்" என்ற செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலைச் சூழலில் நேற்று மரநடுகையில் ஈடுபட்டனர்.

## 2 கிலோ தங்கம் பிடிபட்டது!

10 மில்லியன் ரூபா பெறுமதியான 2 கிலோ தங்கத்தை சட்டவிரோதமான முறையில் கடத்துவதற்கு முயற்சித்த விமானப்படை வீரர் ஒருவர் , கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இன்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் அதே விமான நிலையத்தில் கடமையாற்றுபவர் எனவும் கூறப்படுகின்றது.

வெளிநாட்டிலிருந்து வந்த நபருடன் சந்தேகப்படும் விதத்தில் குறித்த வீரர் நடந்துகொள்வதை சீ.சீ.டிவி கமெரா வில், சுங்க அதிகாரிகள் அவதானித்தனர். அதனையடுத்து, சந்தேகநபரை சோதனையிட்டபோதே அவரின் கடத்தல் முயற்சி பிடிபட்டது.(இ

## பல்கலைக் கழகங்களில் நல்லிணக்க பாடம்

முரண்பாடுகளைத் தீர்த்தலும், நல்லிணக்கமும் என்ற பெயரிலான புதிய பாடத்தை அடுத்தாண்டு பல்கலைக்கழக பாடவிதானங்களில் சேர்க்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் தலைமையில் இயங்கும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகத்துடன் இணைந்து அதற்குரிய ஏற்பாடுகளை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. இது தொடர்பான உடன்படிக்கைகள் ஏற்கனவே கைச் சாத்திடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சுவாமி விபுலானந்தர் நுண்கலை கற்கைகள் பீடம், ஜாமியா நளீமியா உயர் கல்வி நிறுவனம் போன்ற உயர் கல்வி அமைப்புக்களில் பாடத்தைக் கற்க முடியும். (உ)

# ஆசை காட்டி மூவரை சிக்க வைத்த யுவதி

தனியே வந்த தனது நகை களைக் கொள்ளையடித்து, வன்புணர முயன்றவர்களை சமயோசித புத்தியால் பொலி ஸாரிடம் சிக்கவைத்துள்ளார் ஒரு யுவதி.

26 வயதான குறித்த யுவதி ஒருவர் கஷ்டப் பிரதேசம் ஒன்றில் இருந்து வந்து விடுதி யில் தங்கி பலாங்கொடை பிரதேசத்தில் உள்ள ஆடை தொழிற்சாலை தொழில் புரிந்து வருகிறார்.பணிமுடிந்து இரவு நேரம் அவர் விடுதிக்கு திரும்பியபோது ஓட்டோவில் வந்த மூவர் அவரை கடத்தினர். நகைகளைப் பறித்துவிட்டு, அவரை வன்புணரவும் முயன்றனர். எனினும் அவர்களின் ஆசைக்கு இணங்குவது போல நடித்த யுவதி, அவர்களுடன் கூட்டாக பாலியல் உறவு கொள்வதில் விருப்பமில்லை எனவும் இன்னொரு நாள் தனியாக ஹோட்டலில் தனித்தனியாக உறவு கொள்ளலாம் என்றும் கூறியுள்ளார். இதனை நம்பிய கடத்தல்காரர்கள் யுவதி யின் நகைகளை திருப்பிக் கொடுத்ததோடு, அவரை விடுதியில் கொண்டு சென்று இறக்கினர். அடுத்தநாள் ஒரு கடத்தல்காரனுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்ட யுவதி, தான் வைத்தியசாலையில் இருப்பதாகக் கூறி-னார். உடனே அந்த கடத்தல்காரன் சாப்பாட்டு பார்சலோடு யுவதியைச் சந்திக்க வைத்தியசாலைக்கு சென்றபோது பொலிஸார் அவனை மடக்கினர். அவன் சொன்ன தகவல்களின் அடிப்படையில் ஏனைய இரு கூட்டாளிகளையும் பொலி ஸார் பிடித்துள்ளனர்.(இ)

# அநீதியான போராட்டம்

"தபால் ஊழியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் அநீதியானது" என தபால் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார்.

"மழை வெள்ளம் மற்றும் மண்சரிவினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலை யில் தபால் ஊழியர்கள் தொழிற்சங்கப் போராட்டம் நடத்துவது கண்டிக்கத்தக்கது. அரசாங்கத்தை அசௌகரியத்தில் ஆழ்த்தும் சதித் திட்டமே இந்தப் போராட்டத்தின் பின்னணியாகும்.காலி கோட்டை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய தபால் காரியாலயங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானிக்கவில்லை" என்றும் அமைச்சர் கூறினார்.(இ)

# வடக்கை அழிக்கும் லீசிங் நிறுவனங்கள்

## பசுபதிப்பிள்ளை பாய்ச்சல்

"போரால் அனைத்தையும் இழந்து வன்னிப்பிரதேசம் உட்பட வடக்குப் பகுதி யில் லீசிங் நிறுவனங்கள் என்ற பெயரில் கடன் வழங்கும் நிறுவனங்கள் நுழைந்துள்ளன. இவை மக்களுக்கு ஆசைவார்த்தைகளைக் காட்டி கடன்களை வழங்கிக் கொள்ளை இலாபம் ஈட்டுகின்றன. எமது பிரதேசத்தையும் மக்களையும் அழிப்பதே இவற்றின் நோக்கம்"இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் சு. பசு பதிப்பிள்ளை நேற்று, கிளிநொச்சி சந்தைக் கட்டடத் தொகுதித் திறப்புவிழாவின் போது தெரிவித்தார்.

"லீசிங் நிறுவனச் செயற்பாடுகளால் பல அப்பாவிகள் கடனை மீளச் செலுத்த முடியாமல் தற்கொலை செய் துள்ளனர். இந்த நிறுவ னங்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை வடக்கு மாகாண சபை எடுக்க வேண்டும்" என்றும் தெரிவித்தார்.(இ)

# அலங்கார உற்சவம்

கச்சாய் பாதாள வைரவர் ஆலய அலங்கார உற்சவத் திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. உற்சவத் திருவிழாவை தொடர்ந்து வைரவர் சாந்தி, வளந்து வைத்தல்,வழி வெட்டுதல் போன்ற தமிழர் பாரம்பரிய வழிபாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (உ)

# யாழ். மருத்துவபீட மாணவர்கள் களுத்துறை பாடசாலைக்கு உதவி







யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் களுத்துறை புலத்சிங்கள யடகம்பிடிய கனிஷ்ட பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. மாணவர்களுக்கு தேவையான மூன்று இலட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்களான புத்தகங்கள், பாடசாலை பைகள், குடிநீர் போத்தல்கள் ஆகியவற்றுடன் பாடசாலை திருத்தவேலைக்காக 30 ஆயிரம் ரூபா வையும் மாணவர்கள் வழங்கியுள்ளனர். (உ)



# டெல்லி தேர்தல் அலுவலகத்தில் தீ

8 மாடிகளை கொண்ட டெல்லி தேர்தல் அலுவலகத்தில் நேற்று மதியம் 12 மணிய ளவில் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது. கட்டடத்தின் தரைத் தளத்தில் திடீரென்று தீப்பற்றியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதனால், மாடியில் உள்ள தனது அறையில் இருந்து தலைமைத் தேர்தல் ஆணையாளர் நசீம் ஜைதி சக பணியாளர் களோடு உடனே அங்கிருந்து வெளியேறினார். தீயணைப்பு படையினர் விரைந்து செயற்பட்டு 10 நிமிடங்களில் தீயை அணைத்தனர். இதனால் தீ மேலும் பரவாமல் தடுக்கப்பட்டது.இந்த தீ விபத் தில் சேதம் எதுவும் ஏற்படவில்லை. மின் கசிவு ஏற்பட்டதால், இந்தத் தீ விபத்து ஏற்பட்டதாக தீயணைப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

# ரகசிய வீடியோவால் அதிர்ச்சி

அ.தி.மு.கவில் சசிகலா வுக்கு எதிராக ஓ.பன்னீர் செல்வம் பிரிந்தபோது, ஆட்சியைத் தக்க வைக்க கூவத்தூரில் எம்.எல்.ஏக் களை அடைத்து வைத்து கோடிக்கணக்கில் பேரம் பேசி, பணம் கொடுக்கப் பட்டது என்ற ரகசிய வீடியோ ஊடகமொன்றில் வெளியாகியுள்ளது. இதனால் சில நாட்களாக அமைதியாக இருந்த தமி ழக அரசியல்களம் மீண் டும் சூடாகியுள்ளது. சசிகலா அணியில் இருந்து பன்னீர்செல்வம் அணிக்குத் தாவிய சரவணன் என்ற எம்.எல்.ஏ இன்னொருவரு டன் உரையாடிக்கொண் டிருக்கும் வீடியோவில் அவர் " முதலில் 2 கோடி தருவதாகவும், பின்னர் பஸ்ஸில் ஏற்றப்பட்ட போது 4 கோடி தருவதாக வும், கூவத்தூரில் 6 கோடி ரூபா தருகிறோம் எனவும் சொன்னார்கள். கருணாஸ், தனியரசு, தமீம் அன்சாரி ஆகிய மூவருக்கும் 10 கோடி ரூபாவும் தங்கமும் கொடுக்கப்பட்டது" என்று சொல்கிறார். இந்த வீடியோ தமிழக அரசியலில் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத் தியுள்ளது. (இ)

# பாக். கைதிகள் 11 பேர் விடுதலை



இந்தியச் சிறைகளில் அடைக்கப்பட் டிருந்த பாகிஸ்தானியர்கள் 11 பேர் தண்டனைக் காலம் முடிந்தபின்ன ரும் விடுவிக்கப்படாமல் இருந்தனர். அவர்களை விடுவித்து நாடு திரும்ப நடவடிக்கை எடுக்கும்படி பாகிஸ் தான் தரப்பில் கோரிக்கை விடுக்கப் பட்டது. இந்நிலையில் தண்டனைக் காலத்தை நிறைவு செய்த 11 பாகிஸ் தானியர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் அனை வரும் வாகா எல்லையில் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட் டனர். ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின் போது பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை, இந் தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து பேசிய இரண்டு நாட்க ளில் இந்த நடவ டிக்கை எடுக்கப் பட்டுள்ளது குறிப் பிடத்தக்கது. இதேபோல் பாகிஸ்தான் சிறைச் சாலைகளில் உள்ள 132 இந்தியர்களில் 57 பேர் தண்டனைக் காலம் முடிந்தும் விடுதலை செய்யப் படாமல் உள்ளனர். அவர்கள் இந்தியர்கள்தான் என்பதை இந்திய அரசு உறுதி செய்யும்படி பாகிஸ் தான் கோரியுள்ளது. (ஊ)

# மக்ரோன் கட்சி அசுர வெற்றி!

பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலில், நாடாளுமன்றத் தில் பெரும்பான்மை பலத் தைப் பெறும் இலக்கை நோக்கி இம்மானுவேல் மக் ரோனின் கட்சி முன்னேறி வருகிறது. கடந்த ஏப்ரல் மாதம் நடந்த பிரான்ஸ் ஜனாதி பதித் தேர்தலில் என் மார்ச் கட்சியைச் சேர்ந்த இம் மானுவேல் மக்ரோன் வெற்றி பெற்றார். இதன் மூலம் பிரான்ஸின் இளம் ஜனாதிபதி என்ற பெரு மையும் அவருக்குக் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து பிரான்ஸில் நேற்றுமுன் தினம் (ஞாயிற்றுக்கிழமை) நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கையில் பிரான்ஸ் அதிபர் மக்ரோனின் கட்சி தொடர்ந்து முன்னிலைய வகித்து வருகிறது. பிரான்ஸ் நாடாளுமன்றத் தின் மொத்தமுள்ள 577 தொகுதிகளில் 445 தொகுதிகளில் மக்ரோனின் கட்சி வெற்றி பெறும் என்று தகவல்கள் தெரி விக்கின்றன. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதி முடிவுகள் அறிவிக்கப் படவுள்ளன. (இ)

# சிங்கப்பூரில் ஐ.எஸ். பெண்



சிங்கப்பூரில் குழந்தைகள் காப்பகம் ஒன்றில் வேலை பார்த்து வந்த பெண் ஒருவருக்கு ஐ.எஸ். இயக்கத்தின் மீது ஈர்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அவர் , ஐ.எஸ். பயங்கரவாதி ஒருவரைத் தனது கணவனாக்கி கொள்ள வேண்டும் என்ற ஆசையில் தனது குழந்தையுடன் சிரியாவுக்கு செல்ல முயற்சித்துள்ளார். ஆயினும் இதுபற்றிய ரகசியத் தகவல் கிடைத்ததால் சிங்கப்பூர் பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைது செய்தனர். சிங்கப்பூரில் ஐ.எஸ். இயக்கத்தின் பெண் ஆதரவாளர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் முறை.(இ)

# மகாராணியின் உரை இப்போதைக்கில்லை!

பிரிட்டனில் தேர்தல் முடிந்து பெரும்பான்மை பலத்தைப் பெறாததால் கொன்சர்வேட்டிவ் கட்சி மட்டுமின்றி, அந்த நாடே அரசியல் ஸ்திரமின்மை யால் பீடிக்கப்பட்டிருக்கும் குழப்ப நிலை நீடித்து வருகிறது. இந்நிலையில் பிரிட்டன் பாராளு மன்றத்தில் மாகாராணி எலிசபெத்தின் உரையை ஒத்திவைத்துள்ளது அரசு. இந்த உரை நிகழ்ச்சி ஜூன் 19 ஆம் திகதி நடைபெறுவதாக இருந் தது. ஐரோப்பிய ஒன்றியத்தி லிருந்து பிரிட்டன் வெளியேறுவது பற்றிய பேச்சுவார்த்தைகள் அடுத்த வாரம் தொடங்கும் என்று பிரதமர் தெரேசா மே தெரிவித்திருந்தார். ஆனால் தேர்தல் முடிவுக ளால் அவர் எவ்வாறு இந்தப்பணியை முடிப்பார் என்ற கேள்வி எழுந்துள் ளது. இதையொட்டியே மகாராணியின் உரையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனும் சந்தேகம் எழுந்துள்ளது. (இ)

# தடைக்குத் தடை



அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்றவுடன் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஆறு நாடுகளில் இருந்து அமெரிக்கா வருவதற்கு அகதிகளுக்கு 120 நாட்கள் தடையும், மக்களுக்கு 90 நாட்களுக்கு தடை விதித்து உத்தரவிட்டிருந்தார். இந்த தடை அமுலுக்கு வருவதற்கு முன்னரே அமெரிக்க உச்சநீதிமன்றம் டிரம்ப் உத்தரவுக்கு தடை விதித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து டிரம்ப் அரசு மேல்முறையீடு செய்தது. ஆனால் அந்த மேல்முறையீட்டு மனுவையும் நிராகரித்த நீதிபதிகள், டிரம்ப் உத்தரவுக்கு காலவரையின்றி தடை விதித்து உத்தரவிட்டனர். இந்நிலையில், இந்த உத்தரவை எதிர்த்து டிரம்ப் நிர்வாகம் 9ஆவது சுற்று நீதிமன்றத்தில் மீண்டும் மேல்முறையீடு மனுவை தாக்கல் செய்தது. இந்த வழக்கை விசாரித்த 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு, எந்த மதத்தினருக்கும் தடை விதிக்கும்படி, அரசியலமைப்பு சட்டத்தில் இடமில்லை. எனவே அதனை அரசுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ள வேண்டாம் என்று கூறி மேல்முறையீட்டு மனுவை நிராகரித்தது. எனவே டிரம்ப் விதித்த தடை உத்தரவுக்கு தடை தொடரும் என்றும் உத்தரவிட்டுள்ளது. (ஊ)

# ஊடகவியலாளர்கள் மீது ஆசிரியர்கள் அடாவடி




செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை பாடசாலை ஆசிரியர்கள் சரமாரியாகத் தாக்கியதுடன் கமெராக்களையும் பிடுங்கி எறிந்துள்ளனர். இந்தச் சம்பவம் ஹட்டன் நோர்வூட் டிலரி வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. குறித்த பாடசாலையில் பாடப் பயிற்சிகளை தவ றாகச் செய்த மாணவனை ஆசிரியர் ஒருவர் கடுமையாகத் தாக் கியமையைக் கண்டித்து, நேற்று அங்கு ஆர்ப் பாட்டம் ஒன்று இடம் பெற்றது. இது தொடர் பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற ஊட கவியலாளர்களையே அந்தப் பாடசாலையைச் சேர்ந்த ஏனைய ஆசிரியர்கள் தாக்கி யுள்ளனர். எனினும் அவர்கள் இருவரும் ஊடகவி யலாளர்கள் என்று அடையாளப்படுத்தாமல் புகைப்படம் எடுத்ததாலேயே, சிறிது கடுமையாக நடந்து கொண்டதாகவும் , ஒருபோதும் யாரும் அவர்களை அடிக்க வில்லை என்றும் பாட சாலை நிர்வாகம் தெரி வித்துள்ளது. (இ)

# மோ.சைக்கிளுடன் ஓட்டோ விபத்து







ஹட்டன் , டிக்கோயா வனராஜாச் சந்தியில் நேற்று மாலை 6 மணிய ளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயங்களுடன் டிக் கோயா மாவட்ட வைத் தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர். பொகவந்தலாவையி லிருந்து ஹட்டன் நோக்கி சென்ற மோட்டர் சைக்கி ளும், ஹட்டனிலிருந்து காசல்ரீ பகுதி வரை சென்ற ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது. விபத்தில் படுகாயம டைந்த ஓட்டோச் சாரதியும், அதில் பய ணித்த மற்றுமொரு வருமே காயங்களுடன் டிக்கோயா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். விபத்து தொடர்பில் ஹட் டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (இ)

# அரசியல் அனாதைக்கு பதில் சொல்ல முடியாது



" பொதுபலசேனாவின் ஞானசார தேரரை நான் தான் மறைவிடத்தில் வைத்துக் காப்பாற்றுகிறேன் என்று திஸ்ஸ விதாரண கூறியதை விட ஆகச் சிறந்த ஒரு நகைச்சுவை வேறெதுவும் இருக்கமுடியாது. ஒரு காலத்தில் மிகச் சிறந்த முக்கிய கட்சிகளாக திகழ்ந்து தற்போது அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ள திஸ்ஸ விதாரண போன்ற அரசியல் அனாதைகளின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க எனக்கு நேரமில்லை.ஜனாதிபதி தேர்தல் காலத்தில் திஸ்ஸ விதாரண, ஞானசார போன்ற குற்றவாளிகளுட னேயே இருந்தார்" என்று சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (இ)

# ஆசியர்களுடன் மல்லுக்கட்ட தயாராகும் இங்கிலாந்து



சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெற்று வருகின்றது.

மூன்று போட்டிகளில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. அத்துடன் ஏற்கனவே இந்தியா, பங்களாதேஷ் அரையிறுதிக்கு முன்னேறியிருந்தன.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கிடையிலான பரபரப்பான ஆட்டத்தில் வெற்றிபெற்று பாகிஸ்தான் அணியும் அரையிறுதிக்கு முன்னேறியது.

இதன்மூலம் இந்தியா, பங்களாதேஷ் அணிகளுடன் மூன்றாவது ஆசிய அணியாக பாகிஸ்தான் அணியும் இணைந்தது. அரையிறுதியில் இங்கிலாந்து அணி பாகிஸ்தான் அணியுடன் மோதுகிறது. இதில் இங்கிலாந்துக்கு பாகிஸ்தான் அதிர்ச்சி வைத்தியம் அளித்தால் ஆசிய நாடுகளில் ஒன்று கிண்ணத்தை வெல்வது உறுதியாகிவிடும்.

சொந்த மண்ணில் களமிறங்கும் இங்கிலாந்து எப்படியும் அரையிறுதி, இறுதி என அனைத்துப் போட்டிகளிலும் அசத்த வாய்ப்புண்டு.

அதேவேளை, அந்த அணி மாத்திரமே இந்தத் தொடரில் எந்தத் தோல்வியையும் சந்திக்காத ஒரே அணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் இங்கிலாந்து அணி, பாகிஸ்தானை நாளைய தினம் இலங்கை நேரப்படி 3 மணிக்கு எதிர்கொள்கிறது.

நாளைமறுதினம் நடைபெறும் இரண்டாவது அரையிறுதியில் இந்திய அணியும் பங்களாதேஷ் அணியும் மோதவுள்ளன. (உ)

# நீங்களும் ஹீரோ ஆகலாம்




தமிழ் சினிமாவில் எப்போதும் வித்தியாசமானவர் என்றால் அவர் பார்த்திபன்தான்.

இவர் இயக்குநராகவும், நடிகராகவும் தன்னுடைய அதிரடி வசனங்களால் அசத்துவார்.

சமூகம் சார்ந்த கருத்துகளையும் அவ்வப்போது மக்களுக்கு தெரிவிப்பார். சென்னை வெள்ளத்தின் போது கூட களத்தில் இறங்கி மக்களுக்கு உதவி செய்தார்.

இவர் தற்போது தன்னுடைய முகநூல், டுவிட்டர் பக்கங்களில் நீங்களும் Hero ஆகணுமா? என்ற பதாகையை கையில் ஏந்தியபடி இரத்ததானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

அவரது வாசகம், "சினிமாவில் வாய்ப்பு கிடைத்தால் reel hero ஆகலாம். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இரத்த தானம் செய்தால் REAL HERO'' இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. (ஒ)

## தொடங்கியது ‘96’

ப்ரேம் குமார் இயக்கத்தில் விஜய் சேதுபதி, த்ரிஷா நடிக்கும் “96“ படத்தின் படப்பிடிப்பு சென்னையில் படப் பூஜையுடன் தொடங்கப் பட்டது

“நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்“ படத்தின் ஒளிப்பதிவாளர் ப்ரேம் குமார் இதில் இயக்குநராக அறிமுகமாகி இருக்கிறார். அந்தப்படச் சமயத்தில் விஜய் சேதுபதியுடன் ஏற்பட்ட நட்பால், கதை பிடித்துவிட நாயகனாக நடிக்க சம்மதம் தெரிவித்திருக்கிறார். த்ரிஷா நாயகியாக நடிக்கவுள்ளார். ஒரே கட்டமாக மொத்த படப்பிடிப்பையும் முடிக்க படக்குழு திட்டமிட்டுள்ளது. (இ)

## அச்சுறுத்தல்! முடக்கப்படும் டுவிட்டர் கணக்குகள்



டுவிட்டர் கணக்குகளை ‘ஹக்’ செய்து, பிரதான கணக்குகளை அழித்து, அதேபோல குளோனிங் முறையில் போலிக் கணக்குகள் உருவாக்கப்பட்டு தவறான தகவல்களை பரப்பும் அபாயம் தற்போது உலகெங்கும் அதிகரித்துவருவதாக குறிப்பிடப்படுகின்றது.

குறிப்பாக மியான்மர், வெனிசுலா, பஹ்ரைன் நாடுகளில், செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அதிக பின்தொடர்வோர் எண்ணிக்கையைக் கொண்ட முக்கிய நபர்களின் டுவிட்டர் கணக்குகளே ஹக் செய்யப்படுகின்றன. ஹேக் செய்த கணக்கை, அப்படியே அச்சு மாறாமல் பிரதி செய்துவிட்டு, பிரதான கணக்கை அழித்து விட்டு தவறான தகவல்களை பரப்பும் அபாயம் அதிகரித்து வருகிறது.

இத்தகைய ஹக்கிங் மற்றும் பிரதியீடுகள் ‘டபுள்ஸ்விட்ச் (DoubleSwitch)’ என அழைக்கப்படுகிறது. இந்த ஹக்கிங் தாக்குதலான ‘டபுள்ஸ்விட்ச்’ குறித்த தகவல்களை முதன்முதலாக டிஜிட்டல் உரிமைகள் குழுவான ‘அக்செஸ் நவ்’ வெளிக்கொண்டு வந்துள்ளது.

# செவ்வாயில் புற்றுநோய் அதிர்ச்சியில் நாசா

செவ்வாய்க் கிரகத்தில் புற்றுநோயை உருவாக்கக்கூடிய கதிர்வீச்சுகள் அதிக அளவில் இருப்பதாக நாசா விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கியூரியாசிட்டி ரோவர் விண்கலம் மூலம், இதனைக் கண்டுபிடித்துள்ளதாக நாசா விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். செவ்வாய்க் கிரகத்தில் பூமியை விட ஆயிரம் மடங்கு கதிர்வீச்சு இருப்பதாகவும், இந்த கதிர்வீச்சுகள் புற்றுநோயை உருவாக்கும் தன்மை உடையவை என தெரிய வந்துள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். விண்வெளிக்குச் சென்ற வீரர்களின் உடல்நலப் பிரச்சினைகள் தொடர்பாக நடத்தப்பட ஆய்வில், இது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் நாசா விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். (உ)



# ‘காலா’வை கொஞ்சம் அடக்குங்கப்பா


சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துக்கு வித்தியாசமான படமாக ‘கபாலி’ படத்தை தந்தவர் ரஞ்சித்.

இப்படம் கலவையான விமர்சனங்களுக்குள்ளானாலும் வர்த்தக ரீதியாக வெற்றி பெற்றது. இப்படத்தை முடித்த கையோடு ‘காலா’ படத்தையும் சூப்பர்ஸ்டாரை வைத்து இயக்கி வருகிறார்.

இப்படத்தின் புகைப்படங்கள் அடிக்கடி சமூகவலைத்தளங்களில் வெளியாகி ஹிட்டடித்து வருகிறது. ஆனால், இதற்கு நடுவில் சூப்பர்ஸ்டார் நடித்துவரும் பிரமாண்டப் படமான ‘2.0’ பெரியளவில் பேசப்படாமல் இருந்து வருகிறது.

இதனால் இயக்குநர் ஷங்கர் அப்செட்டில் இருக்கிறாராம். ரஞ்சித்திடம் ‘2.0’ படம் வெளியாகும் வரை ‘காலா’ பப்ளிசிட்டியை கொஞ்சம் குறைத்துக்கொள்ளும்படி கூறியுள்ளார் எனத் தகவல்கள் பரவிவருகின்றன. (ஒ)

# இப்போதைக்கு மாற்றமில்லை



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடர் வரை இந்திய அணியின் கும்ப்ளே பயிற்சியாளராக நீடிப்பார் என்று நிர்வாகக்குழுத் தலைவர் வினோத் ராய் கூறியுள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருப்பவர் அனில் கும்ப்ளே. இவரது ஓராண்டு பதவிக்காலம் எதிர்வரும் 18ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இவரது தலைமையில் இந்திய அணி மிகப்பெரிய அளவில் சாதனை படைத்து வருகிறது. இதனால் அவரது பதவிக்காலம் மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் விராட் கோலி - அனில் கும்ப்ளேவிற்கும் இடையே ஏற்பட்ட முறுகலால் அனில் கும்ப்ளேயின் பதவி நீடிப்பு கேள்விக்குறியானது. புதிய பயிற்சியாளரைத் தெரிவு செய்வதற்கான வேலை நடைபெற்றது. பயிற்சியாளரைத் தெரிவு செய்வதற்காக கங்குலி, லக்ஷ்மன் மற்றும் டெண்டுல்கர் தலைமையிலான ஒரு குழு உள்ளது. இந்தக் குழு தற்போது புதிய பயிற்சியாளரைத் தெரிவுசெய்ய இயலாது என்று கூறியது.

இதனால் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் முடிந்த பின்னர், நடைபெறும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக விளையாடும் இந்திய அணிக்கும் அனில் கும்ப்ளேதான் பயிற்சியாளராக இருப்பார் என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் “அனில் கும்ப்ளே ஏற்றுக் கொண்டால் மேற்கிந்தியத் தீவுகள் தொடர் வரை தலைமைப் பயிற்சியாளராக நீடிப்பார்” என்று நிர்வாகக்குழு தலைவர் வினோத் ராய் கூறியுள்ளார்.

இதனால் அனில் கும்ப்ளே அத்தொடர் வரை நீடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)



# மனித உரிமை ஆணையருக்கு எதிராக மகிந்த அணி முறைப்பாடு

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹூசேனுக்கு எதிராக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தலைவரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்யவுள்ளதாக, இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ச ஆதரவு அணியில் உள்ள றியர் அட்மிரல் சரத் வீரசேகர, தற்போது நடந்து வரும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 35ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக நாளை ஜெனிவா செல்லவுள்ளார். இந்தப் பயணத்தின் போது இலங்கைக்கு ஆதரவான பரப்புரையில் ஈடுபடவுள்ளதாகவும், இறைமையுள்ள ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்வதாக, ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு எதிராக, முறைப்பாடு ஒன்றை செய்யவுள்ளதாகவும், றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். “ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கோரியுள்ள கலப்பு நீதிமன்றம் இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயல். எனவே, பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தியதற்காகவும், எமது உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்தமைக்காகவும் அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்.” என்றும் அவர் தெரிவித்தார். (உ)

# இன்றைய கருத்தோவியம்




நன்றி - அத தெரண

## வழமைக்கு திரும்பியது மின்சாரம்

சமீபத்திய இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த மின்விநியோக வலைப் பின்னல்கள் முழுமையாக சீரமைக்கப்பட்டுள்ளதாக மின்வலு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த அனர்த்தங்களால் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டம் 23கோடி ரூபாவை எட்டுவதாக அமைச்சின் ஊடகப் பேச்சாளரும், அபிவிருத்திப் பணிப்பாளருமான சுரஞ்சன் ஜயவர்த்தன கூறினார். (உ)

## 3 கோடி நட்டம்

இயற்கை அனர்த்தங்களால் தபால் துறைக்கு ஏற்பட்ட நட்டம் 3 கோடி 80 லட்சத்தை எட்டுவதாக தபால் மா அதிபர் ரொஹன அபயரத்ன தெரிவித்துள்ளார். களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி மாவட்டங்களில் 71 தபாலகங்கள் சேதமடைந்துள்ளன. இவற்றில் பிரதான தபாலகங்களும் உப தபாலகங்களும் உள்ளடங்கும். (உ)

# துறைமுக அபிவிருத்தி இந்தியாவுடன் பேச்சு



இலங்கையின் துறைமுகங்கள், மற்றும் கப்பல்முறையை அபிவிருத்தி செய்வதில்இந்தியா எவ்வாறு உதவ முடியும் என்பது தொடர்பாக கொழும்பில் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, இலங்கையின் துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவைச் சந்தித்து இது தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தினார். அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது, துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சராக மகிந்த சமரசிங்க பொறுப்பேற்றிருந்தார்.
அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அமைச்சர் மகிந்த சமரசிங்க பேச்சுக்களை நடத்தி வரும் நிலையில், துறைமுகங்கள், கப்பல்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் தொடர்பாக அவருடன் இந்தியத் தூதுவர் கலந்துரையாடியுள்ளார். கொழும்பு துறைமுக கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி போன்றவற்றில் இந்தியா ஆர்வம்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

# அனர்த்தப் பணிகளில் அமெரிக்கப் படையினர்



அமெரிக்க கடற்படையின் யுஎஸ்எஸ் லேக் எரி கப்பலில், கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள அமெரிக்க கடற்படையினர், இலங்கை கடற்படையின் மரைன் படைப்பிரிவினருடன் இணைந்து, வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவிப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். 119 அமெரிக்க கடற்படையினரும், 50 இலங்கை கடற்படை மரைன் படையினரும் இணைந்து மாத்தறையில் அணைகளை திருத்தியமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை 72 அமெரிக்க கடற்படையினரும், 21 இலங்கை கடற்படை மரைன் படையினரும் இணைந்து, காலி, கொழும்பு மாவட்டங்களில் கிணறுகளை சுத்தம் செய்தல், நீர் சுத்திகரிப்பு, புனர்வாழ்வு நடவடிக்கை போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர். இரண்டு வாரகாலம் அமெரிக்கப் படையினர் இலங்கையில் தங்கியிருந்து இந்தப் பணிகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கட்டடங்களைத் தகர்க்க அனுமதிக்கப்போவதில்லை

வெள்ளவத்தையில் உள்ள 1,800 கட்டடங்களைத் தகர்ப்போம் என, அமைச்சர் சம்பிக்க கூறியுள்ள நிலையில் அச்செயற்பாட்டை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என, ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அறிவித்துள்ளது. இது தொடர்பில், அக்கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினருமான என்.குமரகுருபரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வெள்ளவத்தையில், தொடர்மாடிக் குடியிருப்புகள் உள்ளிட்ட 1,800 பாரிய கட்டடங்களைத் தகர்ப்பதென்பது, சட்டமுறைமைகள், நீதி என்பவற்றுக்கு அப்பாற்பட்ட செயற்பாடாகும். இதற்கு அனுமதி வழங்கிய கொழும்பு மாநகரசபை, நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் மீது, முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அனுமதி வழங்கப்பட்ட பின், இன்று தகர்த்தெறிவோம் என்று கூறும் வீராவேசப் பேச்சு, முற்றிலும் கண்டிக்கத்தக்கது என்றார் அவர். (ஊ)

# அனர்த்த பாதுகாப்பு அறிக்கை சமர்ப்பிப்பு

அசாதாரண காலநிலை தொடர்பான ஜப்பானிய நிபுணர்களின் தொழினுட்ப ஆய்வு அறிக்கை அண்மையில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவிடம் கையளிக்கப்பட்டது. 15 பேரைக் கொண்ட ஜப்பானிய நிபுணர்கள் குழுவே இந்த ஆய்வை மேற்கொண்டது. இதன்போது, அனர்த்தங்களை மட்டுப்படுத்திக் கொள்வது தொடர்பாக அந்தக் குழுவினர் சில பரிந்துரைகளையும் முன் வைத்தனர். அனர்த்தங்கள் தொடர்பில் அறிந்து கொள்ளல், அங்கு வசிக்கும் மக்களை பாதுகாப்பாக இடம் பெயர்த்உஉதல், அனர்த்தங் களின் போது மக்கள் அவசரமாக இடம்பெயர் வதற்கான பயிற்சிகளை வழங்குதல் போன்ற விடயங்கள் இதில் உள்

# தபால் ஊழியர்கள் போராட்டம் முடங்கின தபால் சேவைகள்



தபால் ஊழியர்கள் நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு முதல் 48 மணி நேரம் அடையாள வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ள நிலையில் நாடுமுழுவதும் தபால் சேவைப் பணிகள் முடங்கியுள்ளன. வடக்கிலும் தபால் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.
-நுவரெலியா,கண்டி,காலி ஆகிய தபாற் காரியலாயங்களை உல்லாச பயணத் துறைக்கு பயன்படுத்தும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும்,கொழும்பு பிரதான தபால் காரியாலய கட்டிடத்தில் மீண்டும் தபால் காரியாலயத்தை ஆரம்பிக்காமை , ஊழியர் சட்ட மூலத்தை திருத்தி நடமுறைப்படுத்தாமை உள்ளிட்ட நிர்வாகத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலே குறித்த அடையாள வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. (உ- 02)

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை
‘எதிரொலி’ மாலைத் தினசரிக்கு
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை
வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)
வேதனம்: 15,000 + ஊக்கப்படி
தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com



## நாளை நாளும் கோளும்

14.06.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 31ஆம் நாள்
பஞ்சமி பி.ப. 01.39 வரை | திருவோணம் பி.ப. 01.34 வரை | சித்தயோகம்
இராகுகாலம் 11.53-01.23 | சுபநேரம் 04.23-05.53 | எமகண்டம் 07.23-08.53

கொடியேற்றம்: காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி
மண்டைதீவு முகப்புவயல் சிவசுப்பிரமணியர்
கரவெட்டி கிழவித்தோட்ட விநாயகர்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நலம் | பெருமை | மறதி | ஓய்வு | கோபம் | பணிவு | போட்டி | சாந்தம் | நிம்மதி | உயர்வு | தடங்கல் | நன்மை |

## சிசுவின் சடலத்தை தோண்டியெடுத்த நாய்

வீட்டுத் தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த சிசுவின் உடல் ஒன்றை வளர்ப்பு நாய் காட்டிக் கொடுத்தது.

இந்தச் சம்பவம் மகியங்கனை, பூஜாநகரப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

சந்தேகநபரான பெண்ணின் வீட்டில் வளர்க்கப்பட்ட நாய், வழமைக்கு மாறாக நேற்று முன்தினம் பெரிதாக குரைத்ததால்,பெண்ணின் கணவர் அதைக் கட்டிப்போடச் சென்றார். ஆனால் நாய் திடீரென குரைப்பதை விடுத்து தோட் டத்தை தோண்டத் தொடங்கியது. அப்போதே அங்கு சிசு புதைக்கப்பட்ட விடயம் தெரியவந்தது. இதனையடுத்து பெண்ணின் கணவர் மகியங்கனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதனையடுத்தே அவரின் மனைவி கைதாகியுள்ளார். (இ)

### பேஸ்புக் கவிதையால் இடமாற்றம்

தனது தனிப்பட்ட பேஸ்புக் கணக்கில் கவிதை பதிவேற்றம் செய்த குற்றச்சாட்டுக் காக ஆசிரியர் ஒருவர் இடமாற்றப்பட்டுள் ளார். குளியாபிட்டிய மத்திய மகா வித்தியா லயத்தில் கடமையாற் றும் இளம் ஆசிரியர் ஒருவரே இந்தக் குற்றச் சாட்டின் கீழ் பிறிதொரு பாடசாலைக்கு இடமாற் றப்பட்டுள்ளார். இது குறித்து இலங்கை ஆசி ரியர் சங்கத்தின் செய லாளர் ஜோசப் ஸ்டா லின் கருத்துத் தெரிவிக் கையில், "சேவைக்கான தேவை நிமித்தம் காரண மாகவே குறித்த ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட் டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. உண்மையில் அவர் மேற்படி செயலுக் காகவே பழிவாங்கப்பட் டுள்ளார்" என்றார். (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!



2007.06.13

திருகோணமலையில் மேர்சி கோப்ஸ் என்னும் பன்னாட்டுத் தன்னார்வல அமைப்பின், பிலிப் பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டார்.

### பிரதமரைச் சந்திக்க முஸ்தீபு

முஸ்லிம்களின் வர்த் தக நிலையங்கள் தொடர்ச்சியாகத் தாக் கப்பட்டு வருகின்றன. இதனால் எழுந்துள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக ஜனாதிபதி யைச் சந்திக்கும் முயற்சி வெற்றியளிக்காத நிலை யில் பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவைச் சந்திக் கும் முயற்சிகளில் முஸ் லிம் பிரதிநிதிகள் தீவிர மாக ஈடுபட்டுள்ளனர். (எ-09)

## சுரண்டிப் பிழைக்க இன்னொரு வாய்ப்பு

"இரு லொத்தர் சபைகளும் ரவி கருணாநாயக்கவுக்கு மீண்டும் ஒப்படைக் கப்பட்டிருக்கின்றன. இதனால அவருக்கு சுரண்டிப் பிழைக்க இன்னொரு சந்தர்ப் பம் கிடைத்துள்ளது" என மக்கள் விடு தலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

"வெளிநாட்டு அலுவல்கள் அமைச் சுக்கு சற்றும் பொருத்தமில்லாத பொறுப் புகள் ரவி கருணாநாயக்கவுக்கு வழங்கப் பட்டிருப்பது அவர் மென்மேலும் சம்பாதிப்பதற்காகவே.இவ்வாறான அர்த்தமற்ற நடவடிக்கைகளால் நாட்டின் எதிர்காலம் மேலும் இருண்டுகொண்டே செல்கிறது. விடிவொன்று வேண்டு மானால் இந்த அரசு மாறியே தீரவேண் டும்"என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(இ)

## போலி ஆவணங்கள் தயாரித்தவர் கைது

போலியான சாரதி அனுமதிப்பத்திரம் தயா ரிக்கும் நிலையம் ஒன்று பொல்கஹவல, மெட்டிகும்புர பிரதேசத் தில் சுற்றிவளைக்கப்பட் டது. இதன்போது சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் .

மோட்டார் சைக்கிள் ஒன்றை பொலிஸார் நிறுத் திச் சோதனை செய்தனர். அப்போதுசாரதி அனு மதிப் பத்திரம் போலியா னது என்று தெரிய வந்துள் ளது. சாரதியிடம் விசா ரணை மேற்கொண்ட போது குறித்த போலிச் சாரதி அனுமதிப்பத் திரத்தை தயாரிக்கும் நிலையம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதற்க மைவாக மெட்டிகும்புர பிரதேசத்தில் வீடொன் றைச் சோதனை செய்த போது, போலியான வாகன இலக்கத் தகடுகள் நான்கு, போலியான இறப்பர் முத்திரை மூன்று, தேசிய அடையாள அட்டைகள் மூன்று, சாரதி அனுமதிப்பத்திரம் 9 மற் றும் போலியான ஆவ ணங்களும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இதன் போது அந்த வீட்டில் இருந்த 47 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். (இ)

## தேசிய வளங்கள் விற்பனை

நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக் கைகளை எடுத்துவருவ தாக கூட்டு எதிர்கட்சியின் ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குண வர்த்தன தெரிவித்தார். கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டின் தேசிய வளங் களை வெளிநாட்டு தனி யார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் நடவ டிக்கைகளை இடமளிக் காது மக்கள் விழிப்படைய வேண்டும் என்றார். (எ-09)

### தொடர்ச்சிகள்

### தாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜேர்மன்,சுவிட்ஸர்லாந்து , அமெரிக்கா ஆகிய நாடுகளில் இந்தப் போராட்டம் ஒரே நாளில் நடைபெற்றது.

பிரிட்டனில் பிரதமர் வாசஸ்தலத்துக்கு முன்னால் நேற்று மாலை நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் பெருமளவிலான மக்கள் உணர்வுடன் பங்கேற்று தாயக உறவுகளை வலுப்படுத்தினர்.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஒன்றுதிரண்ட மக்கள் கைளில் எழுச்சி வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் புலிக்கொடிகயும் ஏந்தியவாறு உரக்கக் கோஷங்களை எழுப்பினர். இதில் பெற்றோருடன் அங்கு வந்திருந்த சிறார்களும் எழுச்சிகரமாக கோசங்களை எழுப்பியமை பிறமொழி இனத்தினரையும் நெகிழ்ச்சிக் குள்ளாக்கியது. (அ)

### மகிந்தவை...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

சமயத்தவர்கள் பெருவாரியான வர்களின் ஆதரவினை இழக்க நேரிட்டதாக அவர் தெரிவித் துள்ளார். வழமையாக 40 முதல் 45 வீதமான கத்தோலிக்கர்கள் சுதந்திரக் கட்சிக்கு வாக்களிப் பது வழமை என்ற போதிலும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் இந்த எண்ணிக்கை 25 வீதமாக அது வீழ்ச்சியடைந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார். 15 வீதமான முஸ்லிம்கள் வாக்க ளித்துள்ள போதிலும் அந்த தொகை 2 வீதமாக வீழ்ச்சியடைந்தது எனவும் அவர்சுட்டிக் காட் டியுள்ளார். (உ)

### அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணசபையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பொறுப்பேற்ற புறச்சூழல் விசாரணையாளர்களால் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது கருத்தில் எடுக்கப்பட வேண்டியது. குறிப்பாக கடந்த ஆட்சிக் காலத்தில் அரசியல் நிர்வாக முறைகேடுகளால் சீர்கெட்டு இருந்த வடக்கு மாகா ணத்தை சுத்தப்படுத்துகின்ற கடமை அமைச்சர்களுக்கு இருந்தது என்பதை யும் அதுவே மக்களின் எதிர்பார்ப் பாக வும் இருந்தது என்பதை தாங்கள் உணர்வீர்கள் என நம்புகின்றோம்.

விசேடமாக குறித்த குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் சட்டரீதி யானதும் தார்மீக ரீதியிலானதுமான சான்றுகளை முன்வைக்க குறித்த அமைச்சர்கள் தயாராக இருப்பதாக வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே அவர்களுக்கு மேன்முறையீடுவழங் கவும் குற்றச் சாட்டுக்களையும் அதற் கான பதில்களையும் விசாலமாக பரிசீலிக்கவும் மேன்முறையீட்டு உயர் குழுவை நிறுவி மயக்கமற்ற உண்மைகளை கண்டறிய வேண்டும் எனவும் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளுக்கும் ஒற்றுமைக்கும் பங்கமற்ற தீர்மானம் ஒன்றை தாங்கள் எடுக்க வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகின் றோம் "என்றுள்ளது. (அ)

### வற்றாப்பளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற வயோதிபரே உயிரிழந்துள் ளார்.குறித்த வயோதிபர் நேற்றுவற்றாப்பளை அம்மன் கோவில் பொங்கலுக்குச் சென்று, இன்று அதிகாலை ஊருக்கு பஸ்ஸில் வந்து இறங்கியுள்ளார். வீதியில் இருந்து அவர் தனது வீடு நோக்கி நடந்து சென்றுகொண்டிருக்கும் போதே அவரை டிப்பர் வாகனம் ஒன்று மோதித்தள்ளியுள்ளது.அவரை மோதிய டிப்பர் வாகனம் அதே வேகத்தோடு அங்கிருந்து தப்பியோடி விட்டதாகவும் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுவரு கின்றனர். (அ-)

### த.தே.கூ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை மேற்கொண் டுள்ளதாகவும் தெரியவித்துள்ளது. புதிய அரசியலமைப்பை உருவக்கு வதற்காக இறுதியாக நடைபெற்ற வழிநடத்தல் குழு கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது நிறை வேற்று அதிகாரத்தை முழுமையாக நீக்குதல், நாட்டின் ஆட்சித்தன் மையை மாற்றுதல் போன்ற விட யங்களில் மாறுபட்ட நிலைப்பாட் டைக் கொண்டிருந்து. புதிய அரசி யலமைப்புக்கான இடைக்கால அறிக் கையை இறுதி செய்வதில் தொடர்ந் தும் இழுபறியான நிலைமைகள் நீடித்துக்கொண்டிருக்கின்றன. இந் நிலையிலேயே தான் சுதந்திரக்கட்சி கட்சிகளுடனான சந்திப்பை மேற் கொள்வதற்கு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-09)

### யாழ்தேவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு யாழ்ப்பாணத் தில் இருந்து யாழ்தேவி ரயில் வரும்போது தண்ட வாளத்தின் அருகே நின்று 'செல்பி' எடுக்க முனைந் தனர். ஆயினும் எதிர்பார தவிதமாக இருவரும் தண்டவாளத்தில் சரிந்து விழுந்ததால், ரயிலில் மோதுண்டனர்.

இதனால் 26 வயதான கணவன் அங்கேயே உயிரிழக்க, மனைவி படுகாயங்களுடன் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

நேற்று முன் தினமும் செல்பி எடுக்க முயன்ற இரு சகோதரர்கள் கொள்ளுப்பிட்டியில் பலியானமை குறிப் பிடத்தக்கது. (ஆ)

25 ஆவது
பிறந்தநாள் வாழ்த்து

மாவடி லேன், அச்சுவேலியில் வசிக்கும்



தம்பிராஜா நிரோஜன்



தனது 25 ஆவது பிறந்தநாளை கொண்டாடுகின்றார். அவரை

நூறாண்டு காலம் வாழ்க
நோய்நொடி இல்லாமல் வளர்க
ஊராண்ட மன்னர் புகழ் போல
உலகாண்ட புலவர் தமிழர் போல
நூறாண்டு காலம் வாழ்க..
என வாழ்த்துகிறார்கள்.

நண்பர்கள் - சர்மிலன், சுபாசன்

ஆவரங்கால்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 13.06.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.